ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

எம்பெருமானார்தம்முடையசரமதசையில்

அருளிச்செய்த

# ப்ரபன்ன ரஹஸ்யம்.

திருவல்லிக்கேணியில் உபயவேதாந்த ப்ரவர்த்தகரான

வித்வான் - ஸ்ரீமான் - வைத்தமாநிதி - முடும்பை,

ஸ்ரீநிவாச அப்பங்கார்ஸ்வாமிகளால்,

பரிசோதிக்கப்பட்டு;

கோயில் கந்தாடை

அண்ணன்ஸ்வாமிகளின் திருவடிசம்பந்தியும்,

திருவல்லிக்கேணி, பைகிராப்ஸ்ரோட்,

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாய புஸ்தகசாலாதிகாரியுமாகிய

கா. வெ. திருக்கச்சிநம்பி தாஸரால்

சென்னை திருவல்லிக்கேணி,

கம்மர்ஷியல் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

1904.


# விளம்பரம்.

இதனுல் சகலமான ஸ்ரீவைஷ்ணவஸ்வாமிகளுக்கு தெரிவிப்பதாவது:—

சென்னை, திருவல்லிக்கேணி பைகிருப்ஸ் ரோட்டில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவஸம்பிரதாய புஸ்தகசாலையில் தமிழ், தெலுங்கு, கிரந்தம், இங்கிலீஷ் டிரான்சிலேஷன் முதலான ஸ்ரீகோசங்களும், ஸ்கூல் புஸ்தகங்களும் அகப்படும்.

கா-வே. திருக்கச்சிநம்பி தாஸ்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.



## எம்பெருமானார் தம்முடைய சரமதசையில்

அருளிச்செய்த

# ப்ரபன்ன ரஹஸ்யம்.

ஒருவன் ப்ரபன்னனானால், அவனுடைய தேஹயாத்ரை கர்மாதீனமாகையாலே கரையவேண்டா. கரைந்தானாகில் நாஸ்திகனாமித்தனை. ஆத்மயாத்ரை பகவதாதீனமாகையாலே, அதில் தனக்கந்வயமில்லை. உண்டென்றிருந்தானாகில் ஸமர்பணம் பொய்யாமித்தனை. ஆகையாலே உபய யாத்ரையுங்கொண்டந்வயமில்லை. ஆனால் கரணத்ரயங்களையுங் கொண்டு வேண்டுத்துச் செய்துதிரியவோவென்னில், அதுஸ்வரூபமன்று. உபாயாந்தரத்தில் அந்வயமில்லாவிட்டால் ப்ராப்யமானகைங்கர்யத்திலே அந்வயிக்குமித்தனை அதில் இங்கிருக்குநாள் செய்யுங்கைங்கர்யமாறு. அவையாவன, பாஷ்யத்தை வாசித்துவாசிப்பிக்கையும்: அதுவுமாட்டானாகில், அருளிச்செயல்களை ஓதி ஓதுவிக்கவும். அதுவுமாட்டானாகில் உகந்தருளினதிவ்யதேசங்களிலே அமுதுபடி சாத்துபடி யாராய்ந்துப்போரவும். அதுவுமாட்டானாகில் த்வயத்தை அர்த்தாநுஸந்தானம் பண்ணவும். அதுவுமாட்டானாகில், தன்னை என்னுடையவனென்று அபிமானியானொரு வைஷ்ணவனபிமானத்திலே யொதிங்கிவர்த்திக்கவும், அதுவுமாட்டானாகில் திருநாராயணபுரத்திலே ஒருகுடில்கட்டியிருக்கவும். இப்படிவர்த்திக்கும் அதிகாரிக்குமுன்னடிபார்த்து வர்த்திக்க வேண்டுவது மூன்றுவிஷயமுண்டு. அதாவது, அநுகூலரு

ம், ப்ரதிகூலரும், அநுபயரும், இதில் அநுகூலராவார், ஸ்ரீவை ஷ்ணவர்கள். ப்ரதிகூலராவார், பகவத்விரோதிகள். அநுபய ராவார், ஸம்ஸாரிகள். இதில் அநுகூலரான ஸ்ரீவைஷ்ணவர்க ளைக் கண்டால், சந்தனகுஸுமதாம்பூலாதிகளைப் போலேயும், நிலாத்தென்றலைப்போலேயும், அபிமதவிஷயம்போலேயும் உ கந்து வர்த்திப்பான். பகவத்விரோதிகளைக்கண்டால், ஸர்ப்பா க்கினிகளைகண்டாப்போலேயும்வெருவிவர்த்திப்பான். அநுபய ரைக்கண்டால்,காஷ்டலோஷ்டாதிகளைக் கண்டாப்போலேயும் உபேக்ஷித்து வர்த்திப்பான்.இப்படிவர்த்திக்கவொட்டாதொழி கிறது, அர்த்தகாமப்ராவண்யம். அர்த்தகாமமடியாக அநுகூல ரான ஸ்ரீவைஷ்ணவர்களை அவமானம் பண்ணினானாகில், ராஜ புத்ரனை அவமானம் பண்ணினால் ராஜஹ்ருதயம் புண்படுமாப் போலே அவ்வழியால், எம்பெருமான் திருவுள்ளம்புண்படும். ப்ரதிகூலரானபகவத் விரோதிகளை அர்த்தகாமமடியாக ஆதரி த்தானாகில், ராஜா ஸார்வபௌமனாயிருக்க ராஜமஹிஷி க்ஷுத் ரஜந்துக்கள் பக்கலிலே மடிபிக்ஷைப்புக்கால் ராஜாவுக்கு அவ த்யமாமாப்போலே எம்பெருமானுக்கு அவத்யமுமாய் அவ்வழி யால் எம்பெருமான் திருவுள்ளம் புண்படும். அநுபயரான ஸம் ஸாரிகளை அர்த்தகாமமடியாக ஆதரித்தானாகில், ரத்னத்துக்கு ம் பாஷாணத்துக்கும், வாசியறியாதாப்போலே தனக்கும் பிற ர்க்கும் வாசியறிந்திலன். இவனுக்குப் பிறந்த ஜ்ஞானம் கார்ய கரமாகப் பெற்றிலோமேயென்றிவனளவில் ஈசுவரன் என்று மொக்க உதாஸீநனாய்ப்போரும். ஈசுவரனளவில் உத்தாரக ப் ரதிபுத்தியும், ஆசார்யனளவில் உபகாரகத்வ ப்ரதிபத்தியும், ஸ்ரீவைஷ்ணவர்களளவில் உத்தேசியப்ரதிபத்தியும், உபாயத்த ளவில் அத்யவஸாயப்ரதிபத்தியும், உபேயத்தளவில் த்வராப்ர திபத்தியும், சரீரத்தளவில் விரோதி ப்ரதிபத்தியும், சரீரஸம்ப ந்த த்தளவில் பிறிவாகிற ப்ரதிபத்தியும், ஸம்ஸாரிகளளவில் த் ருண ப்ரதிபத்தியும், ஐஸ்வர்யத்தளவில் அக்நி ப்ரதிபத்தியும், விஷயத்தளவில் இடி ப்ரதிபத்தியும் ஆகவிப்பத்து ப்ரதிபத்தி யும் ஓர் அதிகாரிக்கு அவசியம் ஜ்ஞாதவ்யமாகக்கடவது. ஈசுவ ரனளவில் உத்தாரகப்ரதிபத்தியாவது, "ஆவிக்கோர் பத்துக் கொம்பு நின்னல்லாலறிகின்றிலேன்" என்றும், 'என்னுடைய

வாழுநாளென்றும் "ஆவியையரங்கமாலை" என்றும், "எங்ஙனேதரிக்கேனுன்னைவிட்டு" என்றுமிருக்கை. ஆசார்யனளவில் உபகாரகத்வப்ரதிபத்தியாவது, "என்னைத்தீமனங்கெடுத்தாய், மருவித்தொழுமனமே தந்தாய்" என்றும், 'தேவு மற்றறியேன்" என்றும், இத்தியாதிப்படியேயிருக்கை. ஸ்ரீவைஷ்ணவர்களளவில் உத்தேசியப்ரதிபத்தியாவது, "சீதனையே தொழுவார்" ரென்றும், "பயிலுந்திருவுடையார்" ரென்றும், "போதொடு புனல் தூவு புண்ணியரே" என்றும் இத்தியாதிப்படியே யிருக்கை. உபாயத்தளவில் அத்யவஸாயப்ரதிபத்தியாவது, "களைவாய் துன்பங்களையாதொழிவாய்" என்றும், "உன்னாலல்லால் யாவராலு மொன்றுங் குறைவேண்டேன்" என்றும் இத்யாதிப்படியேயிருக்கை. உபேயத்தளவில் த்வராப்ரதிபத்தியாவது "மாகவைகுந்தங்காண்பதற் கென்மனமேக மெண்ணு மிராப்பகலின்றியே" என்றும் "வானுலகம் தெளிந்தேயென்றெய்துவது" என்றும் 'களிப்புங் கவர்வுமற்றென்று துடங்கி, அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ" என்றும், "வழுவிலாவடிமைசெய்யவேண்டுனும்" என்று மிருக்கை. சரீரத்தளவில் விரோதிப்ரதிபத்தியாவது, "பாம்போடொருகூறையில் பயின்றாப்போல்" என்றும், "பொல்லாவாக்கை" என்றும் " ஆக்கைவிடும் பொழுதெண்ணே" என்றும், " மங்கவொட்டு" என்றுமிருக்கை. சரீரஸம்பந்திகளளவில் பிறிவாகிறப்ரதிபத்தியாவது, "தாயே, நோயே" இத்தியாதியும், "பெற்றாரும் சுற்றமுமென்றிவை பேணேன்" என்றும், "பிறிந்தேன் பெற்றமக்கள் பெண்டிரென்றிவை பின்னுதவாதறிந்தேன்" என்றுமிருக்கை. இதரரான ஸ்ம்ஸாரிகளளவில் த்ருணப்ரதிபத்தியாவது, "நீசரென்றும், மிண்டரென்றும், தொழும்பர்" என்றும் இருக்கை. ஐஸ்வரியத்தளவில் அக்நி ப்ரதிபத்தியாவது, "விழுப்பொருளுக்கிரங்கி" என்றும் "ஆண்டார் வையமெல்லாமரசாகி, முன்னாண்டவரேமாண்டாரென்னு வந்தார்" என்றும், "கம்பமதயானைக்கழுத்தகத்தின் மேலிருந்து யின்பமருஞ்செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்" என்றும் இத்தியாதிப்படியே யிருக்கை. விஷயத்தளவில் இடிப்ரதிபத்தியாவது, "புலனைந்து

மேயும் பொறியைந்துநீங்கி'' என்றும், சாந்தேந்துமென்முலை யார் தடந்தோள் புணரின்ப வெள்ளத்தாழ்ந்தேன் அருநரகத் தழுந்தும்பயன்படைத்தேன்'' என்றும், "ஐவர் அறுத்துத்தின்றிட வஞ்சினின்னடைந்தேன்'' என்றும், "கோவாயைவர் என் மெய்குடியேறி கூறைசோறிவை தாவென்று குமைத்துப்போகார், நானவரைப்பொறுக்கிலேன் புனிதா புட்கொடியாய் நெடுமாலே, தீவாய் நாகணையில் துயில்வானே திருமாலே யினிச் செய்வதொன்றறியேன் ஆவாவடி யேற்கிறை யிறங்காய்''என்று மிருக்கை. ஈசுவரனளவில் உத்தாரகப்ரதிபத்தியை, "உயர்வற உயர்நலம்'' துடக்கமான இவைத்திலும், ஆசார்யனளவில் உபகாரகத்வ ப்ரதிபத்தியை, "அஞ்சிறையமடநாராய், வைகல் பூங்கழிவாய், பொன்னுலகாளீரோ, எங்கானலகங்கழிவாய்'' என்னும் தூதுநாலிலும், ஸ்ரீவைஷ்ணவர்களளவில் உத்தேசியப்ரதிபத்தியை, "பயிலுஞ் சுடரொளி நெடுமாற்கடிமை'' துடக்க மானவைத்திலும், உபாயத்தளவில்அத்யவசாய ப்ரதிபத்தியை, "நோற்றநோன்பு'' துடக்கமானவைத்திலும், உபேயத்தளவில் த்வரா ப்ரதிபத்தியை, "முடியானே, நீராய் நிலனுய், பாமருமூவுலகு, மாயக்கூத்தன் துடங்கி முனியேநான்முக'' னளவிலும், சரீரத்தளவில் விரோதி ப்ரபத்தியை, "முன்னீர் ஞாலம்'' துடக்கமானவற்றிலும், சரீரசம்பந்தத்தளவில் பிறிவாகிறப் ப்ரதிபத்தியை, 'கொண்டபெண்டீரிலே'' அபாந்தவாதிகளாகக் கட்டுச்சாத்தியதிலும்,இதரரான ஸம்ஸாரிகளளவில்த்ருண ப்ரதிபத்தியை, "நண்ணாதார் முறுவலிப்ப'' விலும், த்ரிவிதைசுவர்யங்களளவில் அக்நி ப்ரதிபத்தியை "ஒருநாயக'' த்திலும், விஷயத்தளவில் இடி ப்ரதிபத்தியை, "உண்ணிலாவி'' யிலும் ப்ரதமாசாரியரான நம்மாழ்வாரருளிச்செய்கையாலே, இப்பத்துப்ரதிபத்தியும் ஓரதிகாரிக்கு அவசியம் ஜ்ஞாதவ்யமாகத் தட்டில்லை.

எம்பெருமானார் திருவடிகளேசரணம்.

---

PRINTED AT THE COMMERCIAL PRESS,